MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group
Adding years of healthy life

NUH
National University Hospital
A member of the NUHS

Alexandra Health

EASTERN HEALTH ALLIANCE

JurongHealth

SingHealth

SINGHEALTH / PIL / T122R0

நோயாளி தகவல் கையேடு

# பிரிடோஸ்டிக்மீன்

## (PYRIDOSTIGMINE)

## உங்கள் மருந்து பற்றிய தகவல்

# தசைகளைப் பலவீனப்படுத்தும் தசைச் சோர்வு நோய் (myasthenia gravis) பாதிப்புகளுக்குச் சிகிச்சை அளிக்க இந்த மருந்து எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஆனால் இந்த மருந்து இந்நோயைக் குணப்படுத்தாது.

## மருந்தை நான் எப்படி உட்கொள்ள வேண்டும் ?

பிரச்சினையின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். இந்த மருந்தை மருத்துவர் கூறும் அளவில் பயன்படுத்துங்கள்.

மருந்தை முதன்முதலில் எடுக்கத் தொடங்கும்போது, பின்வரும் விவரங்களை நாள்தோறும் பதிவு செய்யுமாறு மருத்துவர் உங்களைக் கேட்டுக்கொள்ளலாம்

- ஒவ்வொரு வேளை மருந்தையும் எந்த நேரத்தில் எடுக்கிறீர்கள்.
- மருந்தை எடுத்த பிறகு எவ்வளவு நேரத்திற்கு உடல்நிலை நன்றாக இருக்கிறது.
- எவ்வளவு நேரத்திற்கு மோசமாக இருக்கிறது.
- பக்க-விளைவுகள் இருப்பது.

இப்படிச் செய்வது, மருந்தை எந்த அளவுக்குக் கூட்டினால் அல்லது குறைத்தால், மற்றும் எத்தனை முறை எடுத்தால் உங்கள் பிரச்சினைக்கு அது நல்ல பலன் தரும் என்பதை மருத்துவர் கண்டறிய உதவும்.

இந்த மருந்தை உணவுடன் எடுத்துக்கொண்டால் பக்க-விளைவுகள் குறையலாம்.

## மருந்து உட்கொள்ள மறந்துவிட்டால் என்ன செய்வது ?

ஒரு வேளைக்குரிய மருந்தை எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை எடுக்காமல் விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

## மருந்து ஏற்படுத்தக்கூடிய பக்க-விளைவுகள் யாவை ?

இந்த மருந்து, பார்வை மங்குதல், வயிறு பாதிப்பு, வயிற்றுப்போக்கு, தலைவலி, வியர்த்தல், முகம் திடீரென்று சிவத்தல், தசை வெட்டி இழுத்தல் அல்லது, கண்ணீர் மற்றும் எச்சில் அதிகரித்தல் போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தலாம். ஆனால், மருந்துக்கு உடல் பழகிவிடும்போது இந்த பக்க-விளைவுகள் குறைந்துவிடும். இவை தொடர்ந்தால் அல்லது அதிகத் தொல்லை தந்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

பின்வரும் பக்க-விளைவுகள் ஏற்பட்டாலும் மருத்துவரிடம் தெரிவியுங்கள்: வழக்கத்திற்கு மாறான இருதயத் துடிப்பு, மயக்கம், தோல் தடிப்புகள், முடி கொட்டுதல், கடுமையான வயிற்றுப்போக்கு, மிதமிஞ்சிய தசைப் பலவீனம், சுவாசிப்பதிலும் விழுங்குவதிலும் சிரமம், சீறுநீர் கழிப்பதில் சிரமம், பேசுவதில் சிரமம் அல்லது மனக்குழப்பம். மருந்தின் மருத்துவ அளவைக் குறைப்பார்.

## நான் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள் யாவை ?

மற்ற மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வந்தால், அதை மருத்துவர் மற்றும் மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால், அதைக் கண்டிப்பாக மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்: முகம்/கண்கள்/ உதடுகள் வீங்கும், மூச்சுவிட சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

இந்த மருந்தினால் பார்வை மங்குதல், தலைச்சுற்றல், அல்லது மந்தநிலை ஏற்படலாம். நீங்கள் முழு விழிப்புநிலையில் இல்லாவிட்டால், அல்லது உங்களால் தெளிவாகப் பார்க்க முடியவில்லை என்றால், வாகனம் ஓட்டாதீர்கள் அல்லது இயந்திரம் இயக்காதீர்கள்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், அதை மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

## மருந்தை நான் எப்படிப் பாதுகாக்க வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்